DINAKARAN

21 JUNE 2022

PAGE 2

# கியூட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

**புதுவை பல்கலைக்கழகம் தகவல்**

**புதுச்சேரி, ஜூன் 21:** கியூட்-பிஜி நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி ஜூலை 4ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என புதுவை பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கான பொதுநுழைவுத்தேர்வுக்கு (கியூட்-பிஜி) விண்ணப்பிக்கும் நாள் ஜூலை 4ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஏற்கனவே ஒரு லட்சம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் 2022-23ம் கல்வி ஆண்டில் முதுநிலை படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் கியூட்-பிஜி தேர்வுக்கு *https://cuet.nta.nic.in* என்ற இணையதளம் வழியாக ஜூலை 4ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இத்தேர்வுக்கான தகுதிகள் குறித்த விவரம் புதுவை பல்கலைக்கழகத்தின் *www.pondiuni.edu.in/admissions-2022-23* என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் *https://cuet.nta.nic.in* மற்றும் *https://nta.ac.in* ஆகிய தேசிய தேர்வு முகமை இணையதளங்களை தொடர்ந்து பார்க்கவும். பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகளுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி வரும் ஜூலை 4ம் தேதி மாலை 5 மணி வரையாகும். விண்ணப்ப கட்டணத்தை செலுத்த கடைசி தேதி வரும் ஜூலை 5ம் தேதி இரவு 11.50 மணி வரையாகும். இணையதளத்தில் விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் திருத்தம் செய்தால் வரும் ஜூலை 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை மட்டுமே செய்ய முடியும் என தெரிவித்துள்ளார்.